# GKR'S INSTITUTE

- DAILY CURRENT AFFAIRS
- MONTHLY MAGAZINE
- TOPICWISE QUESTION
- WEEKLY CURRENT AFFAIRS
- ONE LINER FOR CURRENT AFFAIRS
- MONTHLY QUESTION AND ANSWER

**23.08.2022**

**WEBSITE LINK** : https://gkrsinstitute.com/

**Telegram Link** : https://t.me/gkrsInstitute

**FACEBOOK LINK** : https://www.facebook.com/தமிழில்-பயில்வோம்-UPSC-102987411064022/

## முக்கிய தினங்கள்

1. **அன்னா மாணி: (23 ஆகஸ்ட் 1918 - 16 ஆகஸ்ட் 2001)**
    - ஓர் இந்திய இயற்பியலாளர் மற்றும் வானிலை ஆய்வாளர்.
    - அவர் இந்திய வானிலை ஆராய்ச்சி துறையின் துணை இயக்குநராக பணி புரிந்தார்.
    - அவர் வளிமண்டலவியல் கருவி மயமாக்கல் துறையில் குறிப்பிடத்தக்க பங்களிப்புகளை அளித்தார்.
    - அவர் சூரிய மற்றும் காற்று ஆற்றல் அளவீடுகள், ஓசோன் அளவீடுகள் ஆகியவற்றை ஆய்வு நடத்தி ஏராளமான ஆய்வேடுகளைப் வெளியிட்டார்.
    - அவர் 1976 ஆம் ஆண்டில் இந்திய வானிலை ஆராய்ச்சி துறை துணை இயக்குனராக ஓய்வு பெற்றார்.
    - அவர் இரண்டு புத்தகங்களை எழுதியுள்ளார். அவை - **1980 ல் 'The Handbook for Solar Radiation data for India மற்றும் 1981 ல் Solar Radiation over India.**
    - அவர் 1987ல் KR ராமநாதன் பதக்கம் வென்றார்.

## மாநில செய்திகள்

1. **குடும்ப தலைவிகளுக்கு மாதம் ரூபாய் 1000**
    - **புதுவையில் 21 வயதுக்கு மேல் 55 வயதுக்குள்பட்ட** ஏழைக் குடும்பத் தலைவிகளுக்கு மாதம் ரூபாய் 1000 உதவித்தொகை வழங்கப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் முதல்வர் என்.ரங்கசாமி அறிவித்தார்.
    - மாணவர்களுக்கு அரசு உதவி பெறும் பள்ளிகளில் பிளஸ் ஒன் பிளஸ் டூ படித்து வரும் மாணவர்களுக்கு வரும் அரசு சார்பில் **இலவச மடிக்கணினிகள்** வழங்கப்படும்.
    - ஒன்பதாம் வகுப்பு மாணவர்களுக்கு **இலவச சைக்கிள் வழங்கும் திட்டம்** மீண்டும் நடைமுறைப்படுத்தப்படும்.
    - **காரைக்கால் இலங்கை இடையே கப்பல் போக்குவரத்து**
        - காரைக்கால் துறைமுகம் இலங்கை காங்கேஷன் துறைமுகம் இடையே பயணிகள், சரக்கு கப்பல் போக்குவரத்து நிகழாண்டு தொடங்கப்படும்.
        - **சாகர்மாலா திட்டத்தின்** கீழ் சென்னை துறைமுக கழகத்துடன் இணைந்து புதுவை துறைமுகத்தில் சரக்குகள் கையாளும் பணிகள் நிகழாண்டு முதல் செயல்பட தொடங்கும்.

2. **செம்மொழி தமிழ் விருது**
    - கலைஞர் மு.கருணாநிதி செம்மொழி தமிழ் விருது வழங்கும் விழா நடைபெற்றது.
    - விழாவில் 2020 ஆம் ஆண்டுக்கான விருது தமிழ் பல்கலைக்கழகம் முன்னாள் துணைவேந்தர் **மா.ராஜேந்திரனுக்கும்** 2021 ஆம் ஆண்டுக்கான விருது முன்னாள் தமிழ் பேராசிரியர் **க.நெடுஞ்செழியனுக்கும்**, 2022 ஆம் ஆண்டுக்கான விருது **பிரெஞ்சு நாட்டு அறிஞர் ழான் லூய்க் செவ்வியாருக்கும்** வழங்கப்பட்டது.
    - இந்த விருது இந்தியாவிலேயே மிக உயரிய அளவில் ரூபாய் 10 லட்சம் பரிசு தொகையும், பாராட்டுதலும், முன்னாள் முதல்வர் கருணாநிதி உருவம் பொறித்த நினைவுப் பரிசும் அடங்கியது.

## மத்திய செய்திகள்

## 1. குறைந்தபட்ச ஆதரவு விலை: நான்கு துணைக் குழுக்கள் அமைப்பு

- வேளாண் விளைப் பொருள்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை நடைமுறை தொடர்பாக 4 துணை குழுக்கள் அமைக்கப்பட்டன.
- மத்திய அரசின் மூன்று புதிய வேளாண் சட்டங்களுக்கு எதிராக விவசாயிகள் நடத்திய தொடர் போராட்டங்களை அடுத்து அந்த சட்டங்கள் கடந்த ஆண்டு நவம்பரில் திரும்பப் பெறப்பட்டன.
- இந்நிலையில் குறைந்தபட்ச ஆதரவு விலை தொடர்பான குழுவின் முதல் கூட்டம் டில்லியில் நடைபெற்றது.
- கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆலோசனைகளின் படி வெவ்வேறு பணிகளை மேற்கொள்ளும் வகையில் நான்கு துணைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.
- **முதல் குழுவானது** இமயமலையை ஒட்டிய மாநிலங்களில் பயிர் சாகுபடி முறைகள் புதிய பயிர்கள் அறிமுகம் குறித்தும், இம்மாநிலங்களில் குறைந்தபட்ச ஆதரவு விலையை உறுதி செய்வது குறித்தும் ஆராயும்.
- **சுக்பால் சிங்** தலைமையில் செயல்படவிருக்கும் **இரண்டாவது குழு** நுண்ணீர் பாசன முறையை விவசாயிகளை மையமாகக் கொண்டதாக மாற்றுவது, இதற்கான மானிய தேவைகள் குறித்து ஆலோசிக்கும்.
- **மூன்றாவது குழு** தேசிய வேளாண் விரிவாக்கம் மேலாண்மை நிறுவனத்தின் பிரதிநிதி தலைமையில் செயல்படும்.
- இது இயற்கை விவசாய நடைமுறைகள் குறித்து விவசாயிகளிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான வழிகளை கண்டறியும்.
- இந்திய வேளாண் ஆராய்ச்சி கவுன்சில் உள்பட சில உயர் ஆராய்ச்சி நிறுவனங்கள் தலைமையில் செயல்படவிருக்கும் **நான்காவது குழு** புதிய பெயர்கள் அறிமுகம், சாகுபடி முறைகள் குறித்து ஆய்வு செய்து அறிக்கை அளிக்கும்.

## 2. தாட்கோ

- தாட்கோ மூலம் செயல்படுத்தப்படும் நலத்திட்டங்களை பெறுவதற்கான ஆண்டு வருமான உச்சவரம்பு ரூபாய் மூன்று லட்சமாக உயர்த்தப்பட்டது.
- இதற்கான உத்தரவை **ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை** வெளியிட்டது.
- தாட்கோ மூலம் செயல்படுத்தப்படும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான பொருளாதார மேம்பாட்டு திட்டத்திற்கு குடும்ப ஆண்டு வருமானம் ரூபாய் 2 லட்சமாக நிர்ணயம் செய்யப்பட்டு இருந்தது.
- இந்தத் தொகை ரூபாய் 3 லட்சம் ஆக உயர்த்தப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

## 3. போர்க்கப்பல் நாட்டுக்கு அர்ப்பணிப்பு

- உள்நாட்டிலேயே கட்டப்பட்ட **'விக்ராந்த்'** விமானம் தாங்கி போர்க்கப்பலை பிரதமர் நரேந்திர மோடி செப்டம்பர் இரண்டாம் தேதி நாட்டுக்கு அர்ப்பணிக்கிறார்.
- விமானம் தாங்கி போர்க்கப்பல்களை உள்நாட்டிலேயே கட்டுவதற்கான திட்டத்தை கடந்த 2007 ஆம் ஆண்டு மத்திய அரசு செயல்படுத்தியது.
- அத்திட்டத்தின் கீழ் முதல் விமானம் தாங்கி போர்க்கப்பலாக விக்ராந்த் சுமார் ₹20,000 கோடி மதிப்பில் கட்டப்பட்டது.
- **கொச்சி கப்பல் கட்டுமான நிறுவனம்** அந்த கப்பலை கட்டும் பணியை 2009 ஆம் ஆண்டு தொடங்கியது.

## 4. தேசிய நோய் எதிர்ப்பியல் நிறுவனத்துக்கு புதிய இயக்குனர்

- தேசிய நோய் எதிர்ப்பியல் நிறுவனத்தின் (என்ஐஐ) புதிய இயக்குனராக மூத்த

ஆராய்ச்சியாளர் **தேவாசிஷ் மொஹந்தி** நியமிக்கப்பட்டார்.

### 5. மத்திய பிரதேசத்தில் 'சிமி' பயங்கரவாத செயல்பாடுகள் வேரோடு அழிப்பு

- தடை செய்யப்பட்ட **'சிமி'** பயங்கரவாத இயக்கத்தின் செயல்பாடுகளை மத்திய பிரதேசத்திலிருந்து பாஜக அரசு வேரோடு அழித்துவிட்டதாக மத்திய உள்துறை அமைச்சர் அமித்ஷா பெருமிதத்துடன் தெரிவித்தார்.

### 6. மத்திய மண்டல கவுன்சில் கூட்டம்

- கடந்த 1957ஆம் ஆண்டு நாட்டில் 5 மண்டல கவுன்சில்கள் அமைக்கப்பட்டன.
- 1956 ஆம் ஆண்டு ஆண்டின் மாநிலங்கள் மறுசீரமைப்பு சட்டத்தின்படி அந்த கவுன்சில்கள் அமைக்கப்பட்டன.
- அந்த கவுன்சில்களின் தலைவராக மத்திய உள்துறை அமைச்சர் இருப்பார் .
- இந்நிலையில் மத்திய மண்டல கவுன்சிலில் **மத்திய பிரதேசம், சத்தீஸ்கர், உத்திரபிரதேசம், உத்தரகண்ட்** ஆகிய நான்கு மாநிலங்கள் உள்ளன.
- அந்த கவுன்சிலின் கூட்டம் மத்திய பிரதேச தலைநகர் **போபாலில்** நடைபெற்றது.

### 7. பராகுவேயில் மகாத்மா காந்தி சிலை

- பராகுவே தலைநகர் அசுன்சியானில் மகாத்மா காந்தி சிலையை வெளியுறவு துறை அமைச்சர் **எஸ்.ஜெயசங்கர்** திறந்து வைத்தார்.

### 8. தென்கொரியா - அமெரிக்கா மீண்டும் கூட்டுப் போர் பயிற்சி

- அமெரிக்காவும், தென்கொரியாகவும் இணைந்து மிகப் பிரம்மாண்டமான கூட்டு ராணுவ பயிற்சியை தொடங்கின.
- இந்த கூட்டு பயிற்சிக்கு **உல்ச்சி ஃப்ரீடம் ஷீல்ட்** என்று பெயரிடப்பட்டுள்ளது.